# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0627/2016

ஆணை எண்: 0174/2016

நாள்: 03/12/2016

28.06.2016 நாளிட்ட
''தினமலர்'' நாளிதழ் செய்தி

முறைமன்ற நடுவத்தால் தாமாக
முறையீடாகப் பதிவு
செய்யப்பட்டது

நகராட்சி ஆணையர்
பல்லாவரம் நகராட்சி

எதிர்மனுதாரர்

**ஆணை:**

28.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் வரப்பெற்ற பல்லவபுரம் நகராட்சியில் சில அடிப்படை வசதிகள் மற்றும் பிற இனங்கள் தொடர்பான செய்திகளை 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்ட பிரிவு 7 (1) ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறை மன்ற நடுவத்தால் தாமாகவே முறையீடாக பதிவு செய்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பல்லாவரம் நகராட்சி ஆணையரது அறிக்கைகள் பெறப்பட்டு அதன் மீதான கூடுதல் விவரங்கள் தெரிவித்திட பல்லவபுரம் நகர குடியிருப்போர் நலவாழ்வு சங்கங்களின் இணைப்பு மையத்திற்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்பட்டன. மேலும், 23.08.2016 அன்று மேற்படி இணைப்பு மைய நிர்வாகிகள் மற்றும் பல்லவபுரம் நகராட்சி ஆணையர் ஆகியோரிடம் விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

மேலும், இம்முறைமன்ற நடுவ 30.08.2016 நாளிட்ட அறிவிப்பாணையின்படி பல்லவபுரம் நகராட்சி ஆணையரது அறிக்கை (ந.க.எண்: 1800/16/இ3 நாள்:14.09.2016) வாயிலாக மேற்படி இணைப்பு மையத்தினரின் கோரிக்கைகள் மீதான நடவடிக்கை விவரங்கள் மற்றும் பணிகளின் நிலை தொடர்பான விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

நிலுவையிலுள்ள பணிகளை பொது மக்கள் நலன் கருதி துரிதப்படுத்தி முடித்திட உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறு நகராட்சி ஆணையருக்கு ஆணையிடப்படுகிறது.

2016-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3ஆம் நாள் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெ. பழனிவேல்
செயலாளருக்காக.

5.12.16

<u>பெறுநர்:</u>
தலைவர்/செயலாளர்,
பல்லவபுரம் நகர் குடியிருப்போர் நலவாழ்வு
சங்கங்களின் இணைப்பு மையம்,
பிளாட் எண்: 66, 2வது குறுக்குத் தெரு,
ஏஜிஎஸ் காலனி, குரோம்பேட்டை, சென்னை–600 044.

<u>நகல்:</u>

நகராட்சி ஆணையர்,
பல்லவபுரம் நகராட்சி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.